அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 233/2015
தேதி. 24.09.2015

# மெக்கா நகரில் கூட்ட நெரிசலில் பலியானவர்களுக்கு ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ இரங்கல்

*சவுதி அரேபியாவில் மெக்கா நகரில் கூட்ட நெரிசலில் சிக்கி நூற்றுக் கணக்கானோர் பலியாகி இருப்பதாகவும், 500 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்திருப்பதாகவும் வந்திருக்கும் செய்திகள் நெஞ்சை உருக்குவதாக அமைந்துள்ளன. உலகெங்கிலும் இருந்து இஸ்லாமிய சகோதரர்கள் ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்ட பொழுது இத்துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.*

*கடந்த சில தினங்களுக்கு முன் மெக்கா மசூதியில் கிரேன் விழுந்து ஏற்பட்ட விபத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் பலியானதைத் தொடர்ந்து இன்று நடந்த துயரச்சம்பவம் வேதனையைப் பன்மடங்கு அதிகரிக்க வைத்துள்ளது உலகெங்கிலும் தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை கொண்டாட்டத்தின் போது நடந்த இச்சம்பவம் மிகவும் துரதிஷ்ட வசமானது.*

*மனதை உருக்கும் இத்துயர நிகழ்வில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய என் பிரார்த்தனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,*
*தலைவர்.*